**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**ந.க.எண். 979/அ2/2026 நாள். .03.2026**

**பொருள் :** பள்ளிக் கல்வித் துறை –தற்காலிக பணியிடங்கள் நிரந்தரமாக்கப்பட்டது – IFHRMS இல் நிரந்தரமாகாமல் தற்காலிகமாகவே தொடருதல் பொருட்டு–ஊதியம் பெற இயலாமை அனைத்து தலைமை ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட்ட பணியிட விவரங்களை தொகுத்து கருத்துரு சமர்ப்பிக்க தெரிவித்தல்– தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்.157, பள்ளிக் கல்வித்(பக5(1))துறை, நாள்.05.09.2019.
2. அரசாணை (நிலை) எண்.19, பள்ளிக் கல்வித்(பக5(1)) துறை நாள்.27.01.2025
3. அரசாணை (நிலை) எண்.215, பள்ளிக் கல்வித்(பக5(1)) துறை நாள்.23.09.2025
4. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.065545/எல்/இ3/2025,நாள்.02.03.2026

பார்வை 1 இல் காணும் அரசாணையின்படி 19,427 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் நிரந்தரமாக்கப்பட்டது. அதில் சிலர் மட்டும் நிரந்தர பணியிடத்திற்காக உள்ளீடு செய்யாமல், தற்காலிகம் எனக் குறிப்பிட்டதினால் ஊதிய பெற இயலாத நிலை உள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

பார்வை 2 இல் காணும் அரசாணையின்படி பள்ளிக்கல்வி இயக்ககத்தில் கீழுள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக மாற்றப்பட்டு, அதனைத்தொடர்ந்து, இவ்வரசாணைக்கு பார்வை 3 இல் காணும் அரசாணையின்படி திருத்தம் மேற்கொண்டு திருத்திய அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதிலும் சில பள்ளிகள் மட்டும் நிரந்தர பணியிடத்திற்காக உள்ளீடு செய்யாமல், தற்காலிகம் எனக் குறிப்பிட்டதினால் ஊதிய பெற இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணைகளின்படி நிரந்தரமாக்கப்பட்ட பணியிடங்கள் IFHRMS இல் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிகமாகவே தொடரும் பணியிடங்களின் விவரங்களையும் மற்றும் இவ்விரு அரசாணைகளுக்கு முன்னரே நிரந்தர பணியிடம் வழங்கப்பட்டு அப்பணியிடங்கள் IFHRMS இல் தற்காலிகமாக இருப்பின் அதன் விவரங்களும் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் இச்செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி இணைப்பில் உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 09.03.2026 க்குள் இவ்வலுவலகத்தில் "அ2"பிரிவில் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

IFHRMS தவறாக உள்ளீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் விவரங்களை விடுபடாமல் முழுமையாக தொகுத்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 09.03.2026 நாளன்று கொண்டுவருமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும்.ஒப்படைக்கப்படாத பணியிடங்களுக்கு ஊதிய வழங்க இயலாத நிலை ஏற்படின்

சார்ந்த தலைமை ஆசிரியரே முழுப் பொறுப்பு ஏற்கப்பட நேரிடும் என்றும் அவ்வாறு நிகழும் பட்சத்தில் சார்ந்த தலைமை ஆசிரியரின் மீது துறையால் தக்க நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும், மிக கவனமுடன் செயல்பட திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

படிவம் நிரப்புவதற்கான நிபந்தனைகள்

1. நிரந்தரப்பணியிடம் என்று கோரப்படும் பணியிடம் கண்டிப்பாக நிரந்தரமாக்கப்பட்ட அரசாணையில் இடம்பெற்றுருப்பதை உறுதி செய்த பின்னரே படிவத்தை நிரப்பப்பட வேண்டும்.
2. இப்பணியிடங்களை முதன்முதலாக அனுமதிக்கப்பட்ட/ தோற்றுவிக்கப்பட்ட அரசாணையினை சரிபார்த்த பின்னரே படிவத்தை நிரப்ப வேண்டும். மேலும் உரிய அரசாணை நகலை கருத்துருவில் இணைக்கப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு அலுவலகத்திலும்/பள்ளியிலும் உள்ள அளவுகோல் பதிவேடில் (Scale Register) பதிவு மேற்கொள்ளப்பட்ட அரசாணை எண்ணினை சரிபார்த்த பின்னரே படிவத்தை நிரப்ப வேண்டும்.
4. படிவத்தை நிரப்பும்போது பதவிவாரியாக Position ID உடன் நிரப்ப வேண்டும்.

படிவத்தில் உள்ள கலங்களை பூர்த்தி செய்ய சரிபார்க்கப்பட்டவைகளான, சார்ந்த பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணைகள், GTN Report, Scale Register. தொடர் நீட்டிப்பு ஆணை ஆகியவற்றின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை முன்மொழிந்து கீழ்கண்டவாறு இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்தும் மற்றும் இணைப்பில் உள்ள சான்றினை சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரின் கையொப்பமிட்டும் 09.03.2026 அன்று கண்டிப்பாக எடுத்து வர வேண்டும் என பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

**இணைப்பு:-**

பூர்த்தி செய்யப்பட வேண்டிய
படிவம், சான்று மற்றும் பார்வையில் கண்ட
அரசாணைகளின் நகல்கள்

/ஒப்பம்/
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்.**

**பெறுநர்,**
பள்ளி தலைமையாசிரியர்கள்,
அரசு/நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளி,
வேலூர் மாவட்டம்.

**நகல்**
கோப்பிற்கு

# <u>சான்று</u>

1. சில பணியிடங்கள் தற்காலிகமாகவே IFHRMS இல் தொடர்ந்து வரும் நிலையில் அப்பணியிடங்களை உரிய அளவைப் பதிவேடுகள் மற்றும் அரசாணைகளை சரிபார்க்கப்பட்டு நிரந்தர பணியிடமாக மாற்ற பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
2. இவற்றைத் தவிர்த்து ஏதேனும் தகுதியுடைய பணியிடங்கள் சமர்ப்பிக்க தவறினால் அதற்கான பொறுப்பு சார்ந்த தலைமை ஆசிரியரே சாரும் என இதன் மூலம் உறுதியளிக்கப்படுகிறது.
3. இப்பணிகள் முடிவடைந்தபிறகு இனிவரும் காலங்களில் நிரந்தரமாக்கப்பட்ட பணியிடங்கள் தற்காலிகம் என காணப்பட்டால், அதற்கான முழுப்பொறுப்பும் சார்ந்த தலைமை ஆசிரியரே பொறுப்பாவர் என இதன் மூலம் உறுதியளிக்கப்படுகிறது.

பள்ளி தலைமையாசிரியர் கையொப்பம்.